Deposition of Witness

(Chapter XXV BNSS )

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No. STC. No. 309 /2018

DEPOSITION OF ACCUSED SIDE WITNESS –1

| | | | |
|---|---|---|---|
| Name: | மோகனா | Calling: | இல்லத்தரசி |
| Husband's Name: | பதாஞ்சலி | Religion: | |
| Village: | செட்டியப்பனூர் | Age: | 37 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 19.11.2025 நேரம் : 04.00 PM

(எதிரி ஆஜர். )

எ.த.சா.1 முதன்மை விசாரணை

எதிரியை தெரியும், அவர் எனது கணவர். நாங்கள் செல்வராஜ் என்பவரிடம் தேதி, மாதம் நினைவில்லை, ரூ. 2 லட்சத்து 50,000 த்தை கடன் வாங்கியிருந்தோம். அதற்காக வட்டிக்கட்டி வந்தோம். என் மாமனாருக்கு உடல் நலம் சரியில்லாமல் இருந்ததால் வட்டிகட்ட முடியவில்லை. அதனால் செல்வராஜீம் அவரது தம்பியும் வந்து மிரட்டுவார்கள். 2 வருடங்களாக எங்கள் வீட்டை புகார்தாரர் மிரட்டி பூட்டிவிட்டார்கள். தேதி, மாதம் நினைவில்லை, 2024 ம் வருடம் 1 லட்சம் ரூபாயை எனது கணவரின் நண்பரான வடிவேல் என்பவர் மூலம் புகார்தாரருக்கு கொடுக்கும் படி சொன்னோம். பிறகு வீடு பூட்டி இருந்ததால் அதை திறக்கும் படி காவல் நிலையத்தில் கூறி செல்வராஜ் மற்றும் ரமேஷ் மீது புகார் கொடுத்தோம். பிறகு செல்வராஜ் என்பவர் காவல் நிலையத்திற்கு வந்து நாங்கள் அவருக்கு ரூ.2,50,000 த்தை தரவேண்டும் என்று எழுதிக்கொடுத்திருந்தார், அப்போது அவருக்கு நேரம் இல்லை என்பதால் அவரது மனைவி அங்கு இருந்தார். அப்போது அவரது தம்பியும் புகார்தாரரிடம் நாங்கள் பணம் வாங்கியதாக

எழுதிக்கொடுத்திருந்தார்கள். புகார்தாரர் காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளார் . அந்த காசோலையை ரவுடிகளை வைத்து மிரட்டிதான் வாங்கி சென்றார். நாங்கள் கொடுக்கவேண்டியது ரூ.2,50,000 தான். நாங்கள் அவ்வபோது கொடுப்பதாக சொன்னோம்.

புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை

செல்வராஜ் என்பவர் என் கணவர் மீது என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கில் புகார்தாரர் எனது கணவருக்கு எதிராக என்னென்ன ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியவில்லை. இவ்வழக்கின் காசோலை எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த காசோலையை வங்கியில் பணத்திற்காக போட்டதாகவும் அது போதிய பணம் இல்லை என திருப்பட்டதால் அதற்காக வழக்கறிஞர் வைத்து என் கணவருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய விவரம் பற்றி தெரியுமா என்றால் அதுக்குறித்து நினைவில்லை. 04.02.2018 ம் தேதி புகார்தாரரிடம் எதிரி பணத்தை கடனாக பெற்றுக்கொண்டதற்கு ஒரு பணரசீது கொடுத்துள்ளதாகவும், 04.02.2018 ம் தேதி வழக்கு காசோலை கொடுத்துள்ளதாகவும், அந்த காசோலையானது வங்கியால் 08.05.2018 ம் தேதி போதிய பணம் இல்லை என திருப்பட்டது குறித்தும் 11.05.2018 ம் தேதி அதற்காக வழக்கிறஞர் அறிவிப்பு ஒன்றை அனுப்பியது பற்றியும் 12.05.2018 ம் தேதி என் கணவர் அதை பெற்றுக்கொண்டது பற்றியும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. புகார்தாரரிடம் தம்பியிடம் இருந்து தனிப்பட்ட முறையில் என் கணவர் கடன் வாங்கி அதற்காக ஒரு காசோலையை கொடுத்து அந்த காசோலைக்காக ஒரு வழக்கு தாக்கல் செய்து இதே நீதிமன்றத்தில் என் கணவருக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் அவருக்கு 2020 க்கு பிறகு பிடியாணை பிறப்பிக்கப்பட்ட பின் அவர் தலைமறைவு ஆகிவிட்டார் என்றால் அப்போது நான் என் அம்மாவீட்டிற்கு சென்றுவிட்டேன். மேற்படி விவரம் தெரியுமா என்றால் தெரியும் , ஒன்றரை வருடமாக தலைமறைவாக இருந்தார் என்றால் சரிதான். எங்களது வீட்டை புகார்தாரர் 2018 ல் இருந்தே பூட்டிவைத்திருந்தார் என்றால் 2 வருடமாக பூட்டிவைத்திருந்தார். நாங்கள் கொடுக்கவேண்டி கடனுக்காக புகார்தாரர் எங்களுது வீட்டை பூட்டி குற்ற செயலில் ஈடுபட்டார் என்றால் தவறு , நாங்கள் கொடுக்கவேண்டிய கடனுக்காக தான் புகார்தாரருக்கு எங்களது வீட்டின் சுவாதனத்தை விட்டு இருந்தோம் என்றால்

சரியல்ல. நாங்கள் வாங்கிய கடன் அந்த கடனுக்காக எந்தெந்த ஆவணங்களை என் கணவர் புகார்தாரிடம் கொடுத்தார் எவ்வளவு வட்டி கட்டினார் , மற்றும் கட்டவில்லை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது, என் கணவருக்கு தான் தெரியும். என் கணவர் வாங்கிய கடனில் ரூ. 1 லட்சத்தை எதிரியின் நண்பர் வடிவேல் மூலம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அந்த ஒரு லட்சத்ததை புகார்தாரரின் தம்பிடம் கொடுக்கசொல்லிதான் என் கணவர் அவரது நண்பர் வடிவேலிடம் கொடுத்தார் என்றால் சரிதான். இந்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் என் கணவர் சொல்லிதான் தெரியும் என்றாலும் சரிதான். அந்த ஒரு லட்சத்ததை புகார்தாரின் சகோதரர் வாங்கிக்கொண்டாரா என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் சென்று புகார்தாரர் மற்றும் அவரது சகோதரர் மீது புகார் கொடுத்தது 2020க்கு பின்புதான் என்றால் சரிதான். அன்றைய தினம் புகார்தாரர் காவல் நிலையத்திற்கு வந்தாரா என்றால் வந்தார். அப்போது போலிசார் வாக்குமூலம் ஏதும் வாங்கவில்லை என்றால் சரிதான். நான் கூறுவது தவறு என்றாலும் போலிசார் அவரை அழைக்கவில்லை என்றாலும் அவர் காவல்நிலையத்திற்கே வரவில்லை என்றாலும் சரியல்ல. போலிசாரிடம் நான் கொடுத்த புகாரில் வீட்டை திறந்துக்கொடுக்கும்படி தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அப்போது காவல் நிலையத்தில் இது சிவில் சம்மந்தப்பட்ட பிரச்சனை என்றும் அதை கோட்டில் பார்த்துக்கொள்கிறேன் என்றும் எழுதிக்கொடுத்துவிட்டு வந்தேன் என்றால் நினைவில்லை. காவல் நிலையத்தில் என் புகார் சம்மந்தமாக விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் அதில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அப்போது என்னுடன் யார்யார் வந்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும், என் அக்கா பானுமதி, என் மாமனாரின் நண்பர் சிவலிங்கம் ஆகியோர் வந்திருந்தார்கள். அவர்களையும் விசாரித்து போலிசார் விசாரித்து கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள் என்றால் சரிதான் அந்த சமயம் சிவில் வழக்கு என்பதால் நாங்கள் கோட்டில் பார்த்துக்கொள்கிறேன் என்று எழுதிக்கொடுத்துவிட்டு தற்சமயம் என் கணவருக்கு சாதகமாக பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரிதான். நான் போலிசாரிடம் புகார்தாரருக்கு எதிராக கொடுத்த புகார் தேதி, மாதம் நினைவில்லை, வருடம் 2020 என்றால் சரிதான். புகார்தாரர் என் கணவர் மீது தாக்கல் செய்துள்ள இந்த காசோலை வழக்கை 2018 ம் வருடம் தாக்கல் செய்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் அது நினைவில்லை. 2018 ல் என் கணவருக்கு எதிராக தொடுக்கப்பட்ட இந்த காசோலை வழக்கை திரும்ப பெறவேண்டும்

என்பதற்காகவும் காசோலைக்குண்டான தொகையை புகார் தாரருக்கு திரும்ப தராமல் ஏமாற்றவேண்டும் என்ற நோக்கத்தோடு புகார் தராருக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. காசோலையை மிரட்டி வாங்கிச்சென்ற தேதி, மாதம் நினைவுள்ளதா என்றால் நினைவில்லை. அதுபோன்ற செயலில் புகார் தாரர் ஈடுபடவில்லை என்றாலும் தற்போது நீதிமன்றத்தில் பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் தற்போது சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை வந்ததா என்றால் இல்லை. சாட்சியம் அளிக்க என் கணவர் தான் அழைத்து வந்தார் என்றால் சரிதான். என் மாமனாரின் நண்பர் சிவலிங்கம் என்பவர் பழைய நக்ஸ்லைட் குற்றவாளி என்பது தெரியுமா என்றால் தெரியும். எனது மாமனாரின் நண்பர் சிவலிங்கம் என்பவர் இந்த வழக்கு குறித்தும் ஏற்கனவே நடந்து முடிந்து ரமேஷ் வழக்கு குறித்தும் பல முறை பஞ்சாய்த்து பேசியுள்ளார் என்றால் சரிதான். அந்த கட்டபஞ்சாயத்திற்கு புகார்தாரர்கள் ஒத்துவராததினால் கடைசியாக 2020 ல் நான் காவல்நிலையத்தில் சென்று புகார் அளித்தேன் என்றால் சரிதான். புகார்தாரரிடம் ஒரு லட்சம் பணம் கொடுத்தற்கான ரசீதுயையும் வட்டி கட்டியதற்கான ரசீதையும் நான் பார்த்தேனா என்றால் இல்லை. புகார் தாரருக்கும் எனது கணவருக்கும் இடையே உள்ள கொடுக்கல் வாங்கல் பற்றி எனக்கு தெரியாது என்றால் தெரியும் . அந்த வழக்கில் எதிரியை காப்பாற்ற வேண்டி காவல்நிலையத்தில் புகார்தாரரின் மீது புகார் கொடுத்தும் அது எடுப்பட வில்லை என்பதால் தற்போது எதிரியான கணவருக்கு ஆதரவாக பொய்யான சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் அது சரியல்ல. என் கணவரை மிரட்டி காசோலை வாங்கவேண்டும் என்ற அவசியம் புகார் தாரருக்கு இல்லை என்றாலும் என் கணவர் வாங்கிய பணத்திற்காகதான் காசோலையை கொடுத்தார் என்றாலும் சரியல்ல.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) மோகனா

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2025.11.20 10:17:29 +0530